பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 13 புதன்கிழமை 28.12.2022 கதிர் 53

**இனி இது ரகசியம் அல்ல!**

யார் கற்றுக்குட்டி? அல்லது எது கற்றுக்குட்டித்தனம்? அதுவே இன்று சர்ச்சைக்குரிய கேள்வி.

நீதியரசர் விக்னேஸ்வரனின் நடத்தையை சிறுபிள்ளைத்தன மானது என்கிறார் சாணக்கியன் எம்.பி.

அந்தச்

☞2

# தமிழரசு மத்திய குழு 7 இல் மட்டக்களப்பில்; தமிழ்த் தேசிய கட்சிகள் 8 இல் கொழும்பில்!

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஆராய தமிழ்த் தேசியக் கட்சிகள் அடுத்த மாதம் கொழும்பில் கூடவுள்ளன. எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி கொழும்பில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கின்றார்.

கடந்த கலந்துரையாடல் அவசர அவசரமாக இடம்பெற்ற நிலையில் இம்முறை அனைவரையும் அழைத்து கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டம் வரும் 7ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்று முடிந்த பின்னர் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டத்தை 6 ஆம் திகதி நடத்துவதாக முதலில்

☞2

# மாவையின் தலைமையை ஏற்கிறார் விக்னேஸ்வரன்!

## அவரே பகிரங்க அறிவிப்பு



**யாழ்ப்பாணம்,டிசம்பர் 28**

**தற்போதைய நிலையில் மாவை சேனாதிராஜாவை தலைவராக கொண்டு தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியில் செயற்பட வேண்டும் எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

☞2

## வியட்நாமில் தங்கியிருந்த 303 அகதிகளில் 151 பேர் விமானத்தில் இலங்கை புறப்பாடு!



கனடாவுக்கு படகில் சட்டவிரோதமாக சென்று கடலில் காப்பாற்றப்பட்டு வியட்நாம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 303 இலங்கையை சேர்ந்தவர்களில் 151 பேர் நேற்று வியட்நாம் நாட்டு நேரப்படி பிற்பகல் 5 மணிக்கு விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நவம்பர் 8ஆம் திகதி மியான்மாரில் இருந்து கப்பல் மூலம் கனடாவுக்கு இலங்கையைச் சேர்ந்த 303 பேர் பயணித்த லேடி ஆர் 3 படகில் மியான்மாரில் இருந்து தென் கடற்பரப்பு வுங் டாவ் கடற்கரையில் இருந்து 258 கடல் மைலில் கடலில் படகு மூழ்கும் நிலையில் அங்கிருந்த ஒருவர் தொலைபேசி

☞11

## எட்டு அமைச்சுக்களுக்கு புதிய செயலர்கள் நியமனம்

எட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2023 ஜனவரி 01, முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.

இதன்படி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் புதிய செயலாளராக, எம்.எம்.பி.கே. மாயாதுன்னே நியமிக்கப்பட்டுள்ளார்.

☞11

## பிரதி சீனத் தூதுவர் நாளை யாழ் நகரில்

### நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவிகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நலிவுற்ற குடும்பங்களில் ஆயிரத்து 300 பேருக்கு சீன அரசின் உதவிகள் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற குடும்பங்களில் ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு சீன அரசின் உதவிப் பொதிகள் மாவட்டச் செயலகத்தில் வைத்து நாளை வழங்கப்படுகின்றன.

☞11

## ஐயப்ப பக்தர்கள் நேற்று யாழில் பக்தி பூர்வப் பவனி





யாழ்ப்பாணம் ஐயப்ப பக்தர்கள் நேற்று நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக திரண்டு, அங்கிருந்து யானை ஒன்று சகிதம் ஊர்வலமாக கோண்டாவில் ஈழத்து சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்குச் சென்றார்.

ஹரிஹரசுத சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்ற இவ் ஊர்வலத்தில் பெருந்திரளான ஐயப்பன் பக்த அடியவர்கள்

☞11

## யாழ் அரச அதிபர் மகேசன் அமைச்சுச் செயலராகிறார்



யாழ் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட செயலாளராகக் கடமை ஆற்றி வருகின்ற மகேசன் அடுத்த வருடம் ஜனவரி

☞11


## லொறி – ஓட்டோ நேரில் மோதல் இருவர் சாவு; இருவர் படுகாயம்!



பாதெனிய - அனுராதபுரம் பிரதான வீதியில் தம்புத்தேகம கொன்வெவ பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என தம்புத்தேகம தலைமையகப் பொலிஸார்

☞11

## கரடிபோக்குச் சந்தியை ஒட்டி நீர்பாசன வாய்க்காலில் சடலம்



கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரடிபோக்கு சந்தியை அண்மித்த பெரிய பரந்தன் பகுதியில் அமைந்துள்ள நீர்பாசன வாய்க்காலில் சடலம் ஒன்று அடையாளம் காணப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் தொடர்பில் பொலிசார் விசாரணை ஆரம்பித்துள்ளனர். அந்தப் பகுதியில் தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை

☞11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாணக்கியனைத் தன்னிலும் விட இரண்டரை மடங்கு வயது குறைந்தவர் என்று குறிப்பிடுவதன் மூலம் அவரை கற்றுக்குட்டி எனக்கோடி காட்டுகின்றார் விக்கினேஸ்வரன்.

அரசியலில் வயது அல்ல அனுபவ மூப்புக்கான கணிப்பீட்டு அலகு. விக்கி 83 வயதானவர். வயதில் மூத்தவர்தான். ஆனால் அரசியலில் அனுபவ முதிர்வுக்கு இந்தப் பிறப்புச் சான்றிதழின் வயது மூப்பு சரி வராது.

விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்தே இன்னும் பத்து ஆண்டுகள் கூட ஆகவில்லை. என்னைக் கேட்டால் அரசியல் முதிர்ச்சிக்கும் அவருக்கும் வெகு தூரம் என்பேன். அவர் அரசியலில் கற்றுக்குட்டி - Novice - தான்.

ஆனால் நம் பொதுமக்கள் - தமிழ் வாக்காளர்கள் - கற்றுக் குட்டிகள் அல்லர். அவர்கள் கை தேர்ந்தவர்கள். பழமும் தின்று கொட்டையும் போட்டவர்கள்.

இப்போதும் கூட மக்களை அரசியல் அனுபவமற்றவர்கள் என்றுதான் கற்றுக் குட்டித்தனமாக எண்ணிக் கொண்டு கருத்து வெளியிட்டிருக்கின்றார் விக்னேஸ்வரன். முதலில் அவரது கூற்றை பார்ப்போம். பிறகு விளக்கத்தை நோக்குவோம்.

"தமிழ் தரப்புகளுக்குள் பிரிவினை இருப்பதால்தான் சிங்கள அரசுகள் எம்மை ஏமாற்ற முடிந்தது. நமக்குள் ஒற்றுமை இருக்கின்றது என்பதைக் கண்டால் அவர்களின் அணுகு முறையில் மாற்றம் இருக்கும் என நம்புகிறோம்.

"ஆனால் இப்பொழுதும் தமிழ் தரப்பில் சிலர்தான் தனித்துப் போக வேண்டும் என கூறுகிறார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளை இயன்ற வரை ஒன்றிணைத்துச் செயல்படவே முனைகிறோம்.

"இலங்கைத் தமிழரசு கட்சியின் அரசியல் செயற்குழுவில் எடுக்கப்பட்டவை எனக் கூறப்பட்ட முடிவுகள் பற்றி செய்திகள் வெளியாகின. அந்த செயற்குழுவில் உள்ள ஒன்பது பேரில் பெரும்பான்மையானவர்கள் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரானவர்கள். ஆனால் ஜனவரியில் கொழும்பில் தமிழ் கட்சிகள் சந்திப்பு உள்ளதாக மாவை சொன்னதாகவும் செய்தி வந்தது. இது முரண்பாட்டை ஏற்படுத்தக் கூடும். ஆனால் இந்த முரண்பாடு ஏற்படுவதற்கு சிலரது சுயநல சிந்தனைகள் தான் காரணம்." - என்று கூறியிருக்கின்றார் விக்னேஸ்வரன். அந்தச் சிலரில் அவரும் கூட அடக்கம்தான்.

நல்லது. 'தமிழர் தரப்புக்குள் பிரிவினை இருப்பதால்தான் சிங்கள அரசுகள் ஏமாற்ற முடிந்தது, நமக்குள் ஒற்றுமை இருக்கின்றது என்று கண்டால் அவர்களின் அணுகு முறையில் மாற்றம் இருக்கும் என நம்புகிறோம்' என்று குறிப்பிடுவதன் மூலம் விக்னேஸ்வரன் என்ன கூற வருகின்றார்?

சிங்களவர்களிடம் தமிழர் தரப்பு ஒற்றுமையைக் காட்ட வேண்டியது நடக்கப் போகும் உள்ளூராட்சி தேர்தலில் அல்ல. அதன் மூலம் உண்மையில் ஒற்றுமையைக் காட்டவும் முடியாது.

பேச்சு மேசைக்குப் போகின்ற தமிழ் எம்.பிக்கள் ஒற்றுமையாக - ஐக்கியமாக - ஒன்றுபட்டு - நிற்கின்றார்கள் என்று காட்டுவதுதான் முக்கியம்.

ஆனால் அந்த ஒற்றுமைக்கு ஆப்பு வைத்தபடி, தமிழ் கட்சிகளின் ஒன்றுபட்ட செயற்பாட்டில் முரண்பாடு இருப்பதாகக் காட்டும் விதத்தில் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதிக் கொண்டு, சிங்களவருக்கு ஒற்றுமையைக் காட்டுவது பற்றி தத்துவம் பிளக்கின்றார் விக்னேஸ்வரன். வேடிக்கையாக இருக்கிறது.

ஒன்றுபட்டு உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொண்டு, சிங்களவருக்கு ஒற்றுமையைக் காட்ட முடியாது. தேசிய பிரச்சினைகளைக் கையாளும் விடயங்களில் ஒன்றுபட்டு நின்றுதான் ஒற்றுமை காட்டப்பட வேண்டும்.

அதற்குக் கூட, தேசிய பரப்பில் அதிக எம்.பிக்களை வைத்திருக்கும் கூட்டமைப்பின் தலைமையின் கீழ்தான் - சம்பந்தனின் கீழ்தான் - ஒற்றுமைப் பலத்தைக் காட்ட வேண்டும். தமக்கு உதவியாக சுமந்திரனை அவர் வைத்திருக்கையில் - அக்கட்டமைப்புடன் சேர்ந்துதான் - ஐக்கியத்தை சிங்களவருக்கு காட்ட வேண்டும்; காட்ட முடியும்.

தேசியத் தரப்பில் அரசுடன் பேச்சுக்கு செல்ல முடியாத - எம்.பியே அல்லாத - மாவையின் தலைமையில் ஒன்று திரள்வதாகக் கதை விட்டுக் கொண்டு - அதன் மூலம் சிங்களவருக்கு ஐக்கியத்தை காட்டுவதாக கூறுவது பெரும் பம்மாத்து; பொருத்தமே அற்ற பிதற்றல்.

அரசுடன் பேச்சுக்குப் போகும் தமிழர் தரப்பின் தலைமையான சம்பந்தனையும், சுமந்திரனையும் நலிவுபடுத்தி, நாம் பிரிந்து, பிளந்து, நிற்கின்றோம் எனக் கடிதங்கள் மூலம் ஜனாதிபதிக்கும் சிங்களவருக்கும் காட்டிக்கொண்டு, பேச்சுப் பக்கம் வரவே முடியாத மாவையின் தலைமையில் ஐக்கியப்பட்டு சிங்களவருக்குத் தமிழரின் பலத்தை காட்டப் போகின்றோம் என்ற விக்னேஸ்வரனின் கருத்து உண்மையில் தமிழ் மக்களை இலகுவாக முட்டாளாக்கலாம் என்ற அவரின் (விக்கியின்) அரசியல் கற்றுக்குட்டித்தனத்தையே காட்டுகின்றது.

தமிழரசு அரசியல் குழுக் கூட்ட முடிவை விமர்சித்திருக்கின்றார் விக்கினேஸ்வரன். அவரின் கட்சியை உள்ளூராட்சித் தேர்தலில் தங்களின் அணியில் சேர்ப்பதற்கு எதிரான தமிழரசாரின் கருத்து என்பது தமிழ் தேசியத்தின் ஒற்றுமைக்கு எதிரான கருத்து அல்ல. அது தேர்தல் அரசியல் பற்றிய கருத்து.

எப்படித் தமிழரசை விட்டு வெளியேறி, அதனை உடைத்து, தனியே கட்சிய மைத்து நின்றால்தான் தனக்கு எம்.பி. பதவி தேறும் என்று விக்னேஸ்வரன் கணக்குப் போட்டு, பிளந்து - பிரிந்து - நின்று கேட்டு, எதைச் செய்தாரோ, அது போன்ற கணக்குத்தான் தமிழரசு அரசியல் குழுவின் இப்போதைய தேர்தல் கணக்கும்.

அதை விமர்சிக்கும் விக்னேஸ்வரன், முன்னர் செய்த அதே வேலையைத் தான் - அதே பாணியில்தான் - கணக்கு போடுகிறது தமிழரசின் அரசியல் குழு இப்போது.

ஆக, சிங்களவருக்கு தமிழர்கள் தங்களை ஐக்கியத்தைக் காட்டுவது என்றால், அடுத்த பெப்ரவரி 4 இற்கு முன்னர் தீர்வை காணப் போகின்றார் எனக் கூறும் ரணிலிடம்தான் தமிழர் தரப்பின் அந்த ஐக்கியத்தைக் காட்ட வேண்டும்.

அதற்கு ரணிலுடன் பேச்சுக்குப் போகும் தமிழர் தரப்பின் தலைமையான சம்பந்தனின் பின்னால் அணி திரள்வதுதான் சரியாக இருக்கும்.

பேச்சு மேசைக்கு வரவே முடியாத - பெப்ரவரி முதல் வாரத்தில் நடைபெற போகின்ற தமிழரசின் தேசிய மாநாட்டின் பின்னர், தமிழரசுத் தலைவராக இருப்பாரோ என்று கூடத் தெரியாத - மாவையின் பின்னால் அணி திரள்வதின் மூலம் அல்ல.

இது விடயத்தில் விக்னேஸ்வரனுக்கு தமது அரசியல் நேர்மைத்தனம் குறித்து இன்னும் கொஞ்சம் புதிய அறிவு பெற வேண்டுமானால் சகோதரப் பத்திரிகையான ஈழநாட்டின் இன்றைய இதழில் நண்பர் 'ஊர்க்குருவி'யின் 'இப்படியும் நடக்கிறது' பத்தியை அவர் வாசிப்பதும் கூட நல்லதுதான்.

அரசியல் கற்றுக்குட்டித்தனத்தை களைய, அவர் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கும் என்பது தெளிவு.

- மின்னல் -

## தமிழரசு மத்திய குழு 7 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்ட போதும், அன்றைய தினம் பௌர்ணமி நாள் என்பதால் அது அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக இப்போது தெரியவருகின்றது.

இதேசமயம், தேசியப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசு ஏற்பாடு செய்துள்ள கட்சித் தலைவர்கள் கூட்டம் வரும் 10,11,12,13 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

அதற்கு முன்னாயதமாகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் 8 ஆம் திகதி கொழும்பில் கூடுகின்றன.

அதேவேளை 10 முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வகட்சிக் கூட்டத்தின் முன்னாயத்த நடவடிக்கைகளுக்காக சம்பந்தன், சுமந்திரனை எதிர் வரும் 5 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச குழு உத்தியோகப்பற்றற்ற வகையில் சந்தித்துப் பேசவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. அந்தக் கூட்டத்துக்கு ஏனைய தமிழ்க் கட்சிகளும் அழைக்கப்படக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாவையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைய ஊடகம் ஒன்றுக்கு நேற்று அவர் வழங்கிய செவ்வியிலேயே இப்படி தெரிவித்தார் என அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது:-

இலங்கைத் தமிழரசு கட்சியில் உள்ள சுயநலவாதிகளே தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு எதிராக செயல்படுகின்றனர் எனவும் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார் என அந்த ஊடகம் தெரிவித்தது.

விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கள் என அந்த ஊடகம் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:-

நான் சிறுபிள்ளைத்தனமாக செயல்படுகிறேன் என மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் குறிப்பிட்டார் என்று சிலர் சுட்டிக் காட்டி இருந்தனர். அவர் சிறியவர். அப்படித்தான் பேசுவார். அதனை பொருட்படுத்தத் தேவையில்லை.

நான் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியமை சிறுபிள்ளைத்தனம் என அவர் சொன்னாராம். ஆனால் அந்தக் கடிதம் எழுதியதால் பல விடயங்கள் நடந்துள்ளன.

நாங்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் சுமந்திரன் தொலைபேசியில் அழைத்து ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைக்கிறார் என்றார்.

போதிய அவகாசம் வழங்காமல் சந்திப்பு திகதி குறிப்பது பொருத்தமற்றது என நான் ஒரு கடிதம் அனுப்பினேன். அந்த கடிதம் அனுப்பியதன் பின்னர்தான் ஜனாதிபதி செயலகத்திலிருந்து சொன்னார்கள், அந்த சந்திப்பு ஜனாதிபதி திட்டமிட்டதல்ல, நாங்கள் சந்திக்க வரலாமா என சுமந்திரனை கேட்டுள்ளார், சரி,கேட்கிறீர்கள் வாருங்கள் என்றுதான் ஜனாதிபதி கூறியுள்ளார். ஜனாதிபதி அழைக்கிறார் என எமக்கு சுமந்திரன் சொன்னார்.

அதையும் நாங்கள் யாழ்ப்பாணம் வந்த பின்னர்தான் சுமந்திரன் அழைப்பு விடுத்தார். நாங்கள் சந்திப்புக்கு வரக் கூடாது என்பதற்காகவே அவர் அப்படி செய்திருக்கிறார்.

நான் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திற்கு அனுப்பப்பட்ட பதிலில் சுமந்திரன் கேட்ட சந்திப்பு உத்தியோகப்பற்றற்றது எனவும்ம், ஜனவரி முதல் வாரத்தில் திட்டமிட்டுள்ள சந்திப்புக்கு போதிய அவகாசத்துடன் அழைப்பு விடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தினாலேயே இதெல்லாம் நடந்துள்ளது. என்ன விட இரண்டரை மடங்கு வயது குறைந்தவர் இவையெல்லாம் விளங்காமல் பேசி உள்ளார். - என்றார்

இதேவேளை தமிழ் தேசிய கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ் தரப்புகளுக்குள் பிரிவினை இருப்பதால்தான் சிங்கள அரசுகள் எம்மை ஏமாற்ற முடிந்தது. நமக்கு ஒற்றுமை

(11ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாவட்ட சுகாதார மேம்பாட்டு குழுக்கூட்டம்

மாவட்ட மட்ட சுகாதார மேம்பாட்டுக் குழு கூட்டம் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன்



தலைமையில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) 1.30 மணியளவில் நடைபெற்றது.

இதன்போது தற்போது சடுதியாக அதிகரித்துவரும் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் (2022) டெங்கு நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளானவர்களாக 3 ஆயிரம் 294 பேர் பதிவாகியுள்ளதுடன் 09 இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

தற்போது பருவப்பெயர்ச்சி மழை காலம் என்பதால் டெங்கு நோய் பரவல் அதிகமாகவுள்ளது, இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3,4,5 ஆம் திகதிகளை விசேட டெங்கு ஒழிப்பு தினங்களாக அறிவித்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர், தற்போதைய கால நிலையால் சடுதியாக அதிகரிக்கும் டெங்கு நோய் பரவலை நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே கட்டுப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார்.



இதன்போது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரி ஆ.கேதீஸ்வரன், வைத்திய கலாநிதி எஸ். சிவகணேஸ் மற்றும் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கையில் இரட்டைக் குடியுரிமை கோரும் 1,621 ஆஸ்திரேலியர்கள், 795 அமெரிக்கர்கள்

இலங்கையில் 2021ஆம் ஆண்டில் 5 ஆயிரம் 401 பேர் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்ததாக குடிவரவு – குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர்களில் பெரும் எண்ணிக்கையானனோர் ஆஸ்திரேலியர்கள். இவர்களின் எண்ணிக்கை 1,621.

இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 795 அமெரிக்கர்களும் உள்ளனர் எனவும் குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 31, 2021 வரை இந்த நாட்டில் 4 ஆயிரத்து 654 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நாட்டில் அகதி அந்தஸ்துக் கோரி 208 வெளிநாட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 149 பேர் பாகிஸ்தானியர்கள், 27 பேர் ஆப்கானிஸ்தானியர்களாவர்.

மேலும், டிசெம்பர் 31, 2021 இற்குள் அகதி அந்தஸ்தைப் பெற்று இந்த நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 912 ஆக உள்ளது. அவர்களில் 709 பேர் பாகிஸ்தானியர்கள், 113 பேர் ஆப்கானியர்கள். இதேவேளை, 2021 ஆம் ஆண்டு வருகை தந்த 77 வெளிநாட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் குடி வரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் தங்கியிருந்த 505 வெளிநாட்டவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு அவர்களில் 130 பேர் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டனர் எனக் குடிவரவுத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 4 வகை பயிர் செய்கைகள் யாழில் கடுமையாக பாதிப்பு!

யாழ்ப்பாணத்தில் வழமையாக மேற்கொள்ளப்படும் பயிர் செய்கையில் நான்கு விதமான பயிர் செய்கை பூச்சிய உற்பத்தியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் கைலேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் – சிறிய தினை, பெரிய வெங்காயம், உருளைக்கி ழங்கு மற்றும் இஞ்சி ஆகிய ஆகிய நான்கு பயிர் செய்கைகளை விவசாயிகள் கைவிட்டமையால், அவை பூச்சிய நிலையை அடைந்துள்ளன. குறிப்பாக சங்கானை பிரதேச செயலக பிரிவில் , அராலி பகுதியில் பெரிய வெங்காய பயிர் செய்கையும், கோப்பாய், உடுவில் பிரதேச செயலக பிரிவில், உருளைக்கிழங்கு பயிர் செய்கையும் மற்றும் தினை, இஞ்சி ஆகிய பயிர் செய்கையும் அதிகளவில் இடம்பெற்று வந்த நிலையில் காலநிலை மாற்றம் கார ணமாக விவசாயிகள் செய்கைகளை கைவிட்டு உள்ளமையால், அவை பூச்சிய நிலையை அடைந்துள்ளன எனத் தெரிவித்தார்.

# மின் கட்டணத்தினை அதிகரிக்க மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பில் விசேட விசாரணை!

மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் வெளியான ஊடக தகவல்களை மையப்படுத்தி இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் மின் கட்டணம் அதிகரித்துள்ளதால் மனித உரிமை மீறப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதே இந்த ஆணைக்குழுவின் நோக்கம் என அதன் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் உரிய வகையில் கடமைகளை நிறைவேற்றியுள்ளனரா? என்பது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது. மேற்படி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் இரண்டாம் கட்டம் இந்த வாரம் தொடரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளை விரைவில் நிறைவுறுத்தி அது தொடர்பில் முழுமையான அறிக்கையை வெளியிட எதிர்பார்ப்பதாக மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்துள்ளார்.

# காய்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு!

கடந்த சில தினங்களை விட, காய்கறிகளின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

சில மரக்கறிகளின் விலை 100 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கத்தின் தலைவர் சாந்த ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா உள்ளிட்ட பிரதேசங்களில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழையால் இந்த நிலை



ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மேல், சப்ரகமுவ மாகாணங்களுக்கு புதிய பிரதம செயலாளர்கள் நியமனம்!

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

இதற்கமைய, சப்ரகமுவ மாகாணத்திற்கு மஹிந்த சனத் வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேல் மாகாணத்துக்கு பிரதீப் யசரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்

இந்த நியமனங்கள் எதிர்வரும் 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# நாட்டின் எரிபொருள்களின் தேவை குறிப்பிடத்தக்க சதவீதம் குறைந்தது!

நாட்டின் எரிபொருள் தேவை குறிப்பிடத்தக்க சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், ஆண்டு இறுதிக்குள் எரிபொருள் தேவை சுமார் 50 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடி, நுகர்வு கணிசமான அளவு குறைவு, QR முறைப்படி மாத்திரம் எரிபொருளை விடுவித்தல், எரிபொருள் இருப்புக்களை பராமரிக்க நுகர்வோர்கள் முயற்சி எடுக்காதது உள்ளிட்ட பல காரணங்களால் எரிபொருளின் தேவை குறைந்துள்ளது.

முன்னதாக மாதாந்தம் சுமார் 4 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் டீசல் தேவை இருந்த நிலையில் தற்போது அது 2 ஆயிரம் மெற்றிக் தொன்களாகக் குறைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் முதல் ஜுலை வரையிலான 4 மாத காலத்தில் தினசரி டீசல் பயன்பாடு 6 ஆயிரத்து 496 இலிருந்து 2 ஆயிரத்து 299 தொன்னாகவும், பெற்றோல் பயன்பாடு 3 ஆயிரத்திலிருந்து 764 இலிருந்து ஆயிரத்து 226 தொன்னாகவும் குறைந்துள்ளது.

அதனுடன் ஒப்பிடும் போது, வருட இறுதியில் நாட்டில் எரிபொருளுக்கான தேவை மேலும் குறைந்துள்ளதாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தற்போது இலாபம் ஈட்டியுள்ளதுடன், உலக சந்தையில் எரிபொருள் விலையும் கணிசமான அளவு குறைந்துள்ளது.

இலங்கையில் உரிய எரிபொருள் விலை குறைப்புடன் ஒப்பிடும் போது ஒரு லீற்றர் எரிபொருளின் விலையை 50 முதல் 100 ரூபா வரை குறைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் வினவிய போது, இந்த நாட்டில் எரிபொருள்களின் விலைகள் விலை சூத்திரத்தின் பிரகாரம் தீர்மானிக் கப்படுவதாகவும், இதுவரையில் எரிபொருள் விலையைத் திருத்தும் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# எமது நிலம் எமக்கு வேண்டும் கேப்பாப்பிலவில் ஆர்ப்பாட்டம்!

முல்லைத்தீவு – கேப்பாப்பிலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.




மேற்படி ஆர்ப்பாட்டம் கேப்பாப்புலவு இராணுவ முகாமின் பிரதான வாயிலின் முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதன்போது எமது நிலம் எமக்கு வேண்டும், இராணுவமே வெளியேறு, எங்கள் சொந்தக் காணிகளுக்குள் இராணுவ முகாம் வேண்டாம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் விஜயகுமார், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சாத்தான் ஓதும் வேதம்

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஐக்கியம் மீதும், மாவை சேனாதிராஜாவின் தலைமையின் மீதும் திடீர் காதல் பிறந்திருக்கின்றது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு. இது ஆதரவா? ஆப்பா?

தாம் நீதியரசர் பதவியில் இருந்து ஓய்வு பெற்று, 2013ஆம் ஆண்டு ஏப்ரலில் அரசியல் இறங்காமல் பொதுநல விடயங்களோடு மட்டும் சம்பந்தப்பட்டிருந்த விக்னேஸ்வரன், அப்போது கொழும்பில் தமிழரசு கட்சி நடத்திய தந்தை செல்வா நினைவு நிகழ்வில்,'எங்கு போகிறது தமிழினம்?' என்று சாரப்பட்ட தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றினார்.

தமிழினம் ஒன்று பட்டு நிற்பதே இனி ஆக வேண்டிய காரியம் என்பது அவரின் அந்த உரையின் முத்தாய்ப்பாக அமைந்தது.

அதன் பின்னர் நான்கு மாதத்தில், அவரை வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக வலிந்து வெற்றிலை வைத்து இழுத்து வந்தார் சம்பந்தன். அந்த வரலாற்று தவறுக்காக – எதேச்சாதிகார முடிவுக்காக – இன்றும் அவலப்பட்டு நிற்கின்றார் அவர். அது வேறு விடயம்.

தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாம் ஓர் அணியில் நின்று தான் அவரை முதலமைச்சராகப் பெரு வெற்றி பெற வைத்தன.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் தமிழ் கூட்டமைப்புக்கு மாறாக – எதிராக – அவர் அணி சேர்த்து வைத்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஸ்ரீகாந்தா – சிவாஜி இணையின் கட்சி, அனந்தி சசிதரனின் இயக்கம் எல்லாம் கூட்டமைப்புக்குள் ஐக்கியமாக இருந்துதான் அவரை முதலமைச்சராக்கின.

மாவை சேனாதிராஜா தமிழரசு கட்சியின் செயலாளராக இருந்தார். பின்னர் தமிழரசுத் தலைவரானார். அச்சமயங்களில் எல்லாம் மாவையுடன் முரண்பட்டு நின்றவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

தமிழரசு கட்சியையும், அது தலைமைப் பங்கு வகித்த தமிழ்க் கூட்டமைப்பையும் நலிவு படுத்தும் வேலையையே விக்னேஸ்வரன் முழு மூச்சாகச் செய்தார்.

முதலமைச்சர் பதவியை கடைசி நாள் வரை அனுபவிப்பதற்காக காத்திருந்து அவர், அதுவரை தமிழரசிலிருந்து விட்டு, அந்த கடைசி நாளுடன் காரியம் முடிந்ததும், தமிழரசை விட்டு எழுந்து, பின்புறத்தைத் தூசு பறக்கத் தட்டிக் கொண்டு, புறப்பட்டார்.

தமக்கு ஓர் அரசியல் பதவியை ஏற்படுத்துவதற்காகத் தமிழ் தேசியத் தரப்புகளைப் பிளந்தார். தனிக்கட்சி ஆரம்பித்தார். கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தரப்புகளை தனக்கு ஆதரவாக திரட்டி கூட்டமைப்புக்கு எதிராக நின்று தம்மை எம்.பியாக உறுதிப்படுத்தினார்.

அதற்காக அவர் ஆரவாரத்துடன் பயணித்த தமிழ் மக்கள் பேரவையும், அவரது தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியும் இப்போது சேடமிழுக்கும் நிலைக்கு வந்துவிட்டன. இனி அத்தரப்பில் நின்று தேர்தலை எதிர் கொள்வது கஷ்டம் என்றதும், இதுவரை தனக்கான தேர்தலுக்காக ஐக்கியத்தைப் பிளந்தவர், இப்போது தேர்தலுக்காக ஐக்கியம் பற்றிப் பேசுகிறார்.

தமக்கு எம்.பி. பதவி ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக தமிழ் தேசிய தரப்புகளை பிளந்த அவர், காரியம் ஆனதும் எதிர்த்தரப்பில் இருக்கும் கூட்டமைப்பை – குறிப்பாக தமிழரசை – நலிவடையச் செய்து, அடுத்த தரம் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக, மீண்டும் ஐக்கியம் பற்றித் தத்துவம் பேசுகிறார் – சாத்தான் வேதம் ஓதுவது போல.

தமிழரசுக்குள் தலைமை விடயத்தில் தள்ளாடிக் கொண்டிருக்கும் மாவைக்கு வெளியில் இருக்கும் விக்னேஸ்வரன் கொடுத்துள்ள உயர்வு நவிழ்ச்சி தலைமைத்துவச் சான்றிதழ், நிச்சயம் கட்சிக்குள் மாவைக்கு மேலும் பின்னடைவையே ஏற்படுத்தும்.

பாவம் மாவை. கட்சிக்குள் தன்னை நிரூபிக்க விக்கியின் சான்றிதழை பெறவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறார்...!

## இறக்காமம் பிரதேச சபை 2023 பாதீடு நிறைவேற்றம்

இறக்காமம் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட அமர்வு தவிசாளர் எம்.எஸ்.ஜெமில் காரியப்பர் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

2023 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட வாசிப்புக்கு ஆதரவாக 10 வாக்குகளும், எதிராக 01 வாக்கும் அளிக்கப்பட்டு பெரும்பான்மையுடன் வரவு – செலவுத்திட்டம் நிறைவேறியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகைக்குள் இயங்கி வருகின்ற இந்தச் சபையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 5 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 4 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 3 பேரும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அடங்கலாக மொத்தம் 13 உறுப்பினர்கள் இந்தச் சபையில் அடங்குகின்றனர். அதற்கமைவாக, வரவு – செலவுத்திட்ட வாக்கெடுப்பின்போது தவிசாளர் அடங்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 3 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 3 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 3 பேரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கே.எல்.தாஹீர் இதற்கு எதிராக வாக்களித்திருந்தார். ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல். முஸ்மி மற்றும் என்.எம்.ஆசிக் ஆகிய இரு உறுப்பினர்களும் நேற்றைய அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருள் 85 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை!

### யாழில் சம்பவம்



யாழ்ப்பாணத்தில் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருளை 85 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதாக போதைப்பொருளுடன் கைதானவர்களிடம் இடம்பெற்ற விசாரணைகளில் தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் திங்கட்கிழமை 18 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஆறுகால்மடம் மற்றும் கொக்குவிலை சேர்ந்த 24 மற்றும் 25 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை, தமக்கு போதைப்பொருள்களை கொழும்பில் இருந்து ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்து ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருளை 60 ஆயிரம் ரூபா வீதம் விற்பனை செய்வதாகவும், அதனை தாம் வாங்கி ஒரு கிராமை 85 ஆயிரம் ரூபா வீதம் விற்பனை செய்வதாகவும் ஆரம்ப விசாரணைகளில் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் , அவர்களின் விற்பனை வலையமைப்பைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, இவர்களுக்கு போதைப்பொருளை விற்பனைக்காக விநியோகிக்கும் நபர்களைக் கண்டறிவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## சாரதிகள் செய்யும் தவறுகளுக்காக சாரதி புள்ளி முறைமை நடைமுறைக்கு!

வாகனத்தை செலுத்தும் போது சாரதி செய்யும் தவறுகளுக்காக சாரதி புள்ளி முறைமையை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.




மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, வீதியில் செல்லும் சாரதிகள் வாகனத்தை செலுத்தும் போது செய்யும் தவறுகளுக்கு புதிய முறைமையின் கீழ் தகுதி புள்ளிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பான அபராதங்களை விதிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அடிப்படை முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இது அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இன்று புதன்கிழமை திருவெம்பாவை!

இந்துக்களின் திருப்பள்ளிஎழுச்சி, திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் இன்று (புதன்கிழமை) அதிகாலை ஆரம்பமாகின்றது.

சிவனை நினைந்து வழிபடும் இந்த விரதம் இன்று அதிகாலை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இறுதியில் பத்தாம் நாள் வெள்ளிக்கிழமை திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இந்தக் காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளை அதிகாலை 4 – 6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இந்த ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.

காரைதீவு இந்து சமயவிருத்திச்சங்கம் வருடாவருடம் நடத்திவரும் திருப்பள்ளிஎழுச்சி ஊர்வலம் இன்று அதிகாலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.

06 ஆம் திகதி திருவாதிரை அதாவது ஆருத்ரா தரிசனத்துடன் இந்த விரதம் நிறைவடையும்.



# ஓம் சரவணசேவா அறக்கட்டளையின் ஊடாக வவுனியாவில் வீடுகள் கையளிப்பு!

வவுனியா ஈச்சங்குளத்தில் ஐக்கிய இராட்சிய ஓம் சரவண சேவா அறக்கட்டளையின் ஊடாக அமைக்கப்பட்ட 4 வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

நேற்று (செவ்வாய்கிழமை) 'சற்குரு சரவண பாவா மனசாந்தி குடியிருப்பு' எனும் பெயரில் அமைக்கப்பட்ட வீடுகள் சுமார் 45 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி வீடுகள் விசேட தேவையுடையோர் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த நிகழ்வில் சற்குரு சரவண பாபா குரு, நாடாளுமன்ற உறுப்பினர் மு. இராதாகிருஷ்ணன், வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், ஜனாதிபதியின் இணைப்பாளர் இளங்கோவன், லைக்கா குழுவின் பணிப்பாளர் க. பிறேம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார கண்ணன், உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எந்தவொரு கட்சியிலோ அல்லது கூட்டமைப்பிலோ இணையவில்லை!

## சம்பிக்க ரணவக்க திட்டவட்டம்

தாம் எந்தவொரு கட்சியிலோ அல்லது கூட்டமைப்பிலோ இணையவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளதாக அண்மையில் வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதாரத்தை கருத்திற் கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பரந்த கூட்டணி வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இருப்பினும் தமது கொள்கைகளுடன் உடன்படக் கூடியவர்களுடன் மட்டுமே கூட்டணி அமைக்கத் தயாராக உள்ளதாகவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



# 38 வருட காலப் பொலிஸ் சேவையில் இருந்து யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஓய்வு!

யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பிரியாவிடை நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாண பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றி வந்த விஜித குணரட்ண, தனது 38 வருட கால பொலிஸ் சேவையை நேற்றைய தினத்துடன் நிறைவு செய்து ஓய்வு பெற்றார்.

அதனை முன்னிட்டு, அவருக்கான பிரியாவிடை நிகழ்வுகள், யாழ் பொலிஸ் நிலைய மைதானத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஆரியகுளம் நாக விகாரையின் விகாராதிபதி, ஏனைய மத தலைவர்கள் கலந்து கொண்டு ஆசி வழங்கியதுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டு , மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நினைவு பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது,

நிகழ்வில் யாழ்,காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை விரைவில் நடைபெறும்!

## சுசில் பிரேமஜயந்த உத்தரவாதம்



கல்வி நிர்வாக சேவையில் சுமார் 800 பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதற்கமைய அந்த வெற்றிடங்களுக்கான பரீட்சை மிக விரைவில் நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கையின் படி, இம்மாதம் 31ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள கல்வி அமைச்சின் அதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு நாளை முதல் விமான சேவைகள்!

ரஷ்யாவின் 'ரெட் விங்ஸ்' விமான சேவை நிறுவனத்தின் இலங்கைக்கான விமான சேவை நாளை (வியாழக்கிழமை) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

ரெட் விங்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தினூடாக 404 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதரவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அசூர் மற்றும் ஏரோப்ளோட் விமான நிறுவனங்கள் ஏற்கனவே ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பித்துள்ளன.


ரெட் விங்ஸ் மூலம் இலங்கைக்கான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ரஷ்யா – இலங்கை இடையில் 03 நேரடி விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு, கிழக்கு சாதாரண மக்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் கிடையாது!

## எல்லே குணவங்ஸ தேரர் இப்படிக் கருத்து



தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இல்லாத பிரச்சினையை தோற்றுவிக்கும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அரசியல் வாதிகளுக்கு மாத்திரம் அரசியல் பிரச்சினை உள்ளதே தவிர சாதாரண மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் கிடையாது.

நாட்டைப் பிளவுப்படுத்தும் செயற்பாடுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என தேசிய வளங்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ஸ தேரர் தெரிவித்தார்.

கோட்டை – நாகவிகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபடும் பிக்குகளை அடக்கும் வகையில் புதிய சட்டத்தை இயற்ற அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. ஒருசில தரப்பினரது முறையற்ற செயற்பாடுகளால் ஒட்டுமொத்த பௌத்த பிக்குகளையும் குறைகூற முடியாது.

புத்தசாசனத்தில் உரிய கோட்பாடுகள் உள்ளன. பௌத்த பிக்குகள் அந்த கோட்பாடுகளை முறையாக பின்பற்ற வேண்டும். பிக்குகளை அடக்கும் வகையில் சட்டங்களை இயற்றுவதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது, உதிரிபாகங்களை இணைத்த வாகனத்தை போல் இயங்கும் இந்த அரசாங்கம் தன்னிச்சையாக செயற்பட முடியாது.

எனது விகாரையின் மாத மின்கட்டணம் 48 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளது. மின்கட்டணம் அதிகம் என்பதற்காக புத்த பெருமானின் சிலையை இருளிலா வைப்பது?

மின்சார அமைச்சரின் தான்தோன்றித்தனமான பேச்சுக்கள் மக்கள் மத்தியில் வெறுக்கத்தக்கனவாகக் காணப்படுவதுடன், மக்கள் போராட்டங்களைத் தீவிரப் படுத்துகிறது.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. இதற்கு மக்கள் பொறுப்புக் கூற வேண்டிய தேவை கிடையாது. மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவதை விடுத்து அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுக் கொள்கிறது. தேவையில்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதிகார பகிர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு இனங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளவேண்டும். – என்றார்.

# மயிலிட்டிவாழ் மக்களை சந்தித்தார் சுமந்திரன்!






தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று (செவ்வாய்க் கிழமை) மயிலிட்டி பாரதி சனசமூகநிலையத்தில் மயிலிட்டி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வலிகாமத்தில் முழுமையாக மீள் குடியேற்றப்படாமல் மயிலிட்டிவாழ் மக்கள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தின் ஒரு பகுதி தற்போதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக மக்களின் குறைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான லயன் சி.ஹரிகரன், லயன் செ.விஜயராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

## சீனாவில் தொற்றுப் பரவல் அதிகரித்தாலும் கூட

# மெய்நிகர் நிலையில் அல்ல; நேர் நிலையில்தான் ஜி 20யை ஒட்டிய இந்திய நிகழ்வுகள் எல்லாமும்!





சீனாவில் கொவிட் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில், ஜி20 தலைமையின் கீழ் திட்டமிடப் பட்ட கூட்டங்களை நேரடி பிரசன்னத்தில் – பௌதீக நிலையில் நடத்துவதே இந்தியாவின் நோக்கம் என்று வெளியுறவு அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்துள் ளது.

இரு நூறுக்கும் மேற்பட்ட சந்திப்புகளை – ஒன்று கூடல்களை – நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அவற்றில் சில ஏற்கனவே டிசம்பரில் நடந்துள்ளன. இந்த சந்திப் புகளை பௌதீக பிரசன்ன வடிவத்தில் நடத்துவதே எங்கள் எதிர்பார்ப்பும் நோக்கமும் ஆகும். இந்த வழி காட்டுதல்களை எப்போது மாற்ற வேண்டும் அல்லது இதை மாற்ற வேண்டுமா என்பதைத் திட்டமிட்டு, நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம், என்று வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்ச்சி தெரிவித்தார்.

கொவிட் – 19 பயத்தைக் கருத்தில் கொண்டு வரவி ருக்கும் ஜி20 கூட்டங்களை மெய்நிகர் பயன்முறையில் நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளதா என்று கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போதைக்கு, இந்த சந்திப்புகளை நேரடி பௌதீகப் பிரசன்ன வடிவத்தில் நடத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்" – என்று அவர் வாராந்திர செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்.

திட்டமிடப்பட்ட ஜி 20 கூட்டங்கள் தொடர்பான திட்டத் தில் மாற்றம் இருந்தால் அறிவிப்பு வெளியிடப்படும் என்று அரிந்தம் பாக்சி மேலும் கூறினார்.

குறிப்பிடத்தக்க வகையில், டிசம்பர் 1 அன்று இந் தியா ஜி20 தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டது. அதன் தலைமைத்துவத்தின் போது, இந்தியா 32 வெவ் வேறு பணிநிலைகளில் 50 க்கும் மேற்பட்ட நகரங்களில் 200க்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்தும். ஜி20 என் பது உலகின் 20 பெரிய வளர்ந்த மற்றும் வளரும் பொரு ளாதாரங்களின் அரசுகளுக்கிடையேயான ஒரு மன்ற மாகும், இது சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான முதன்மை மன்றமாக உள்ளது.

சீனாவில் கொவிட் தொற்றுப் பரவல் நிலைமையை இந்தியா கண்காணித்து வருவதாக, நாட்டில் தொற்றா ளர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் நிலை யில் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீனாவில் கொவிட் நிலைமையை நாங்கள் கண் காணித்து வருகிறோம். உலகின் மருந்தகமாக மற்ற நாடுகளுக்கு நாங்கள் எப்போதும் உதவி செய்துள்ளோம் என்று பாக்சி கூறினார்.

கொவிட் – 19 சூழ்நிலையில் ஜி20 கூட்டங்களில் சீன பங்கேற்பு மீதான கட்டுப்பாடு தொடர்பான கேள்விக்கு பதிலளித்த பாக்சி, புதிய வழிகாட்டுதல்கள் வந்தால், குறிப்பிட்ட பகுதிகள் அல்லது குறிப்பிட்ட புவியியல் மீது ஏதேனும் கட்டுப்பாடுகள் இருந்தால் என்ன என்பதைப் பாருங்கள். அவர்கள் ஜி20 உருப்பினர்களாக இருந்தா லும் இல்லாவிட்டாலும், அனைவருக்கும் இது பொருந் தும். இந்தியாவில் நுழைவது குறித்த கூடுதல் வழிகாட் டுதல்கள் குறித்து என்னிடம் எந்த தகவலும் இல்லை. – என்றார் அவர்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# ‘கொவிட் ’ தடுப்புக்கு மூன்றாவது டோஸாக தடுப்பூசிக்குப் பதில் மூக்கு வழியாக மருந்து

## இந்தியாவில் இப்போது அறிமுகமாகிப் பயன்பாட்டில்!




மற்ற நாடுகளில், முக்கியமாக சீனாவில், கொவிட் தொற் றுகள் அதிகரித்து வரும் நிலையில், அதன் கொவிட் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி, இந்திய அரசாங்கம் பாரத் பயோடெக் இன் இன்ட்ராநேசல் தடுப்பூசி இன்கோவாக் (Incovacc) ஐ அதன் தடுப்பூசி திட்டத்தில் ஒரு கலவை மற் றும் பொருத்தமாக அல்லது பன்முகத்தன்மை வாய்ந்த, பூஸ்டர் டோஸாக சேர்த்துள்ளது. இன்கோவாக் என்பது பூஸ்டர் டோஸாக அங்கீகரிக்கப்பட்ட உலகின் முதல் இன்ட்ராநேசல் (மூக்கு வழியான) தடுப்பு மருந்து ஆகும்.

மூக்கு வழியாக ஊசி இல்லாமல் வழங்கப்படும் இந்த தடுப்பு மருந்து இந்திய நாடு முழுவதும் உள்ள தனியார் மை யங்களில் இன்னும் சில நாள்களில் கிடைக்கும். இது (கடந்த) வெள்ளிக்கிழமை பிற்பகுதியில் இருந்து அரசாங்கத்தின் தடுப் பூசி மேலாண்மை தளமான CoWIN இல் ஒரு விருப்பின் பேரில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க் கப்பட்டது.



ஒகஸ்ட் மாதத்தில் Corbevax க்குப் பிறகு தடுப்பூசி திட் டத்தில் சேர்க்கப்படும் இரண்டாவது பன்முக ஊக்கி இதுவாகும். Incovacc செப்டம்பரில் முதன்மை மருந்தாகவும், நவம்பரில் பூஸ்டர் டோஸாகவும் நாட்டின் உச்ச மருந்து கட்டுப்பாட்டா ளரிடமிருந்து தகுதி பெற்றுக் கொண்டது.

இது, மூக்கு மற்றும் வாயில் உள்ள மியூகோசல் மென் படலத்தில் உள்ளிழுக்கும் தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுகிறது. இன்ட்ராநேசல் தடுப்பூசியாக இருப்பதால், BBV154 மேல் சுவாசக் குழாயில் உள்ளூர் ஆன்டிபாடிகளை (பிற பொருள் எதிரிகளை) உருவாக்கலாம், இது தொற்று மற் றும் பரவுதலைக் குறைக்கும் திறனை வழங்கக்கூடும் என்று ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட பாரத் பயோடெக் கூறு கிறது. இந்நிறுவனமே Covaxin ஐயும் தயாரிக்கிறது.

இதற்கிடையில், அதன் கொவிட் எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக, இந்திய அரசாங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் கொவிட் தடுப்பு ஒத்திகைப் பயிற்சி ஒன்றை நடத்துகிறது. தவிர, சனிக்கிழமை முதல், நாட்டிற்கு வரும் சர்வதேச பயணிகளில் இரண்டு சதவீதம் பேர் சீரற்ற முறையில் திரையிடப்படுவார்கள் (சோதனை செய்யப்படுவார்கள்) என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார அதிகாரிகளுட னான சந்திப்பில், ஒரு மில்லியனுக்கு தற்போதைய 79 பேர் என்ற கணக்கிலிருந்து சோதனையை அதிகரிக்கவும், ஆர்.டி. – பி.சி.ஆர். சோதனைகளின் பங்கை அதிகரிக்கவும் மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன. கழிவுநீர், பான் – சுவாச வைரஸ் மற்றும் வசதி அடிப்படையிலான செண்டினல் கண்காணிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு அவர்கள் வலியுறுத்தப் பட்டனர். குறிப்பாக வரவிருக்கும் பண்டிகைகளைக் கருத்தில் கொண்டு, கோவிட் – பொருத்தமான நடத்தையைப் பின்பற்று வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு மாநிலங்களை மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தி னார்.

### மூன்றாவது டோஸாக மட்டுமே

Covaxin அல்லது Covishield இன் 2 டோஸ்களைப் பெற்ற பெரியவர்களுக்கு மட்டுமே Incovacc ஒரு பூஸ்டர் டோஸாகக் கிடைக்கும். ஏற்கனவே பூஸ்டர் டோஸ் எடுத்தவர் கள் உட்பட, வேறு எந்த வகையினருக்கும் இது வழங்கப்பட மாட்டாது.

இந்த வார தொடக்கத்தில், மரபணு வரிசைப்படுத்தலுக்காக அனைத்து நேர்மறை மாதிரிகளையும் INSACOG நெட்வொர்க் ஆய்வகங்களுக்கு அனுப்புமாறு மத்திய சுகாதார செயலாளர் மாநிலங்களை கேட்டுக் கொண்டார்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, நுரையீரலுக்குள் நுழைவதற்கு முன்பு மேல் சுவாசக் குழாயில் பிரதிபலிக்கும் ஒமிக்ரான் வகை களுக்கு Incovacc பயனுள்ளதாக இருக்கும்.

இந்தியாவில் உள்ள 14 தளங்களில் கிட்டத்தட்ட 3,100 பங்கேற்பாளர்களின் மூன்றாம் கட்ட சோதனையில் அதன் சொந்த கோவாக்சினுடன் ஒப்பிடும்போது இந்தத் தடுப்பு



மருந்து பாதுகாப்பானது, நன்கு சகித்துக் கொள்ளக்கூடியது மற்றும் நோயெதிர்ப்பு சக்தி கொண்டது என்று நிறுவனம் முன்பு கூறியது.

கோவாக்சின் அல்லது கோவிஷீல்டை முதன்மை தடுப் பூசியாகப் பெற்றவர்களுக்கு இன்கோவாக் மருந்தை ஊக்கி யாகப் பயன்படுத்த முடியுமா என்பதைச் சரிபார்க்க 875 பங்கேற்பாளர்களுடன் ஒரு சோதனையும் நடத்தப்பட்டது.

நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுவதற்கு, தடுப்பூசியானது மாற்றியமைக்கப்பட்ட சிம்பன்சி அடினோவைரஸைப் பயன் படுத்துகிறது, இது கொவிட் ஸ்பைக் புரதத்தை எடுத்துச் செல்ல உடலில் பிரதிபலிக்க முடியாது. இது வொஷிங்டன் பல் கலைக்கழகம் – செயின்ட் லூயிஸ் உடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஸ்பைக் புரதத்தைக் கொண்டு செல்லும் வெக்டரை உருவாக்கி, முன் மருத்துவ ஆய்வுகளில் அதை மதிப்பீடு செய்தபோது, பாரத் பயோடெக் நிறுவனம் தயாரிப்பு மேம்பாடு மற்றும் உற்பத்தித் திறனைக் கையாண்டது.

உலகளவில் அதிகரித்து வரும் கொவிட் தொற்றுகளின் பின்னணியில் தடுப்பூசி திட்டத்தில் Incovacc சேர்க்கப்பட் டுள்ளது. நாட்டில் வழக்குகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வந்தாலும், டிசம்பர் 22 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் ஒரு நாளைக்கு 153 தொற்றுகள் மட்டுமே பதிவாகி யுள்ளன.

சீனா, தென் கொரியா, ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ், கிரீஸ், இத்தாலி மற்றும் பல நாடுகளில் தொற்றுகள் அதிகரித் துள்ளன. உலகளவில், கடந்த ஆறு வாரங்களில் சராசரியாக ஒவ்வொரு நாளும் 5.9 லட்சம் தொற்றுகள் பதிவாகியுள்ளன.

இதுவரை, இந்தியாவில் 22.2 கோடி மூன்றாவது டோஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. வயது வரையறைக்குட்பட்டவர்களுக்கு பூஸ்டர் கவரேஜ் 27 சதவீதமாக உள்ளது என்று சுகாதார அமைச் சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. 60 வயதுக்கு மே ற்பட்டவர்களில் 40 சதவீதமும், 18 முதல் 59 வயதுக்குட்பட்ட வர்களில் 22 சதவீதமும் ‘கவரேஜ்’ அதிகமாக இருந்தது.

கடந்த வியாழனன்று நடைபெற்ற உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடி, முதியோர், பாதிக்கப்படக்கூடிய மக்கள் தங்கள் மூன்றாவது டோஸைப் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஒரு மூத்த அதிகாரி கூறுகையில், கடந்த இரண்டு ஆண்டு களில் நாங்கள் கற்றுக்கொண்டது என்னவென்றால், பரவுவ தைத் தடுக்க முடியாது, எண்ணிக்கை அதிகமாகிவிடாத வகை யில் அதைக் கட்டுப்படுத்தலாம் என்பதுதான். நாட்டில் தொற் றுக்கள் குறைவாக இருக்கும் நேரத்தில் தயாராக இருப்பதற்குக் காரணம், நாங்கள் வேறு இடங்களில் உள்ள காட்சிகளைப் பார்க்கிறோம் என்பதே." – என்றார்.

(மூலம்: ‘த இண்டியன் எக்ஸ்பிரஸ்’)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 225

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



உலக அடங்கிலும் பிரித்தானிய காலனித்துவம் ஏற்படுத்திக் கொண்டதற்கு உடந்தையாக இருந்தது, உள்நாட்டின் போட்டிகளில் ஈடுபட்டிருந்த பகுதிகளுக்கு தாங்கள் பக்கபலமாக ஆயுதங்களுடன் நிற்போம் என்று காட்டிப் பின்னர், கடைசியில் அந்தப் பகுதிகளுக்கு மேலாக வளர்ந்து, அதிகாரங்களை பெற்றுக் கொண்டு, நாட்டையே ஆண்டமைதான்.

இன்றைய புவியியல் அரசியலில், அமெரிக்காவோ, ஏன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவோ, வித்தியாசமானவை அல்ல.

இவற்றை அறிந்து கொண்ட அனுபவசாலிகளான தமிழ் மக்கள், அவர்களின் தலைவர்கள்தான், இவற்றை சாதுரியமாகக் கையாள வேண்டும். சமாதான பேச்சுக் காலங்களில் சொல்ஹெய்ம் மாத்திரமல்லர், நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர், அதிகாரிகள் என எத்தனை பேர் இந்தியாவிற்கு விஜயங்கள் மேற்கொண்டு, அந்நாட்டின் அனுசரணைகளை நாடினார்கள்?

1987 லிருந்து நடந்தவற்றிலும், 1990 இல் அதன் படைகளை முகத்தில் அடித்தால் போல வெளியேற்றப்பட்டதிலிருந்து, இந்தியா வகுத்துக் கொண்ட குறியிலிருந்து அது விலக விரும்பவில்லை. தனது பிராந்திய வலுவுக்காக விடுதலைப் புலிகளின் அழிப்புக்கு அது துணை போனது. தமிழ் மக்களின் உணர்வுகள் இவை பற்றிய விடயத்தில் வேறுபட்டிருந்தாலும் – அதன் துன்பங்களும் வடுக்களும் வன்மங்களாக இருந்தாலும் – எரிந்த அந்த சாம்பல்களில் இருந்து ஜடாயு ஒன்று கிளம்பி இருந்திருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களிடையே தொடர்ந்தும் இருந்த ஒற்றுமையீனங்கள் எவ்வளவு ஜடாயுக்களை தோற்றுவித்தன?

ஜனாதிபதி ரணில் தொடங்கிய பேச்சு வார்த்தைகள், ஆண்டுகள் கடந்து, காலங்களை இழுத்தடித்து, தெளிவற்ற தீர்மானங்களால் சில அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையிலானது அல்ல. நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நீள வருட கணக்கில் இவற்றைத் தொடர்ந்து கொண்டு போக முடியாது. ரணிலின் அடிப்படைத் தந்திரம் பொருளாதார நெருக்கடியில் இருந்த நாட்டை மீட்க தனக்கு ஒப்பானவர் இல்லை என்று ஆதங்கங்களில் மக்களால் நேரடியாக ஜனாதிபதி ஆக்கப்படுவதற்கான ஆதரவுகளை தேடுவது முக்கியம். அடுத்த சுதந்திர தினமான பெப்ரவரி நாலாம் திகதிக்கு முன் என நாளும் குறித்தார்.

அதற்கு இன்னும் மாதங்கள் கூட இல்லை. அதனால், தமிழ் மக்களின் எல்லா தரப்புக்களும் சேர்ந்து யதார்த்தமான அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்து, காலிமுகத்திடல் போராட்டங்களின் பின்னும் சிங்கள தரப்புகள் எவற்றை இன்னும் தரத் தயாராக உள்ளார்கள் என்பதை அறிவதில் என்ன தவறு? ஆனால் தமிழ் தரப்புக்கள் நாட்டிலும், புலத்திலும் பேசுபவற்றையும், எழுதுபவற்றையும் பார்த்தால், அடுத்தவன் முன்னுக்குப் போய்விடுவானா, தாம் ஓரங்கட்டுப்பட்டு விடுவோமா, அப்படியானால் முன்னேறும் அவனை எப்படி இழுத்து வீழ்த்துவது என்று அவர்களது ‘நண்டு



வண.பிதா ஜேம்ஸ், ஆழிப்பேரலைத் தாக்கத்தின் பின்னர் தமது முல்லைத் தீவு பரிஷ் பிரிவுக்குச் சென்று வழிபாடு நடத்திய பின்னர், ஆழிப்பேரலைத் தாக்கத்தில் உறவுகளை இழந்த அவரின் பிரிவு மக்கள் கதறி அழுத காட்சிகளில் ஒன்று....

மனோபாவங்களில்’ பயணிக்கின்றமையைத்தான் காணக்கூடியதாக இருக்கின்றது. இவை அவர்களது நாடாளுமன்ற ஆசனங்களுக்கு எவ்வளவு அனுகூலம் தரும் என்பது அல்ல, தமிழ் மக்களின் அபிலாசைகளின் தலைவிதிக்கானவை என்ற உணர்வும் அர்ப்பணிப்பும் தேவை.

## நாளை நமதே

நடக்கின்ற சர்வதேச அரசியலின் புவியியல் சுழற்சிகளிலும் தங்களால் தங்களுக்கான தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று தமிழ் பரப்புகள் நாட்டிலும் புலத்திலும் ஒன்றிணைந்து இயங்கினால் அது முடியும். அப்படியின்றி இழுத்த பக்கம் எல்லாம் சந்தேகங்களிலும், தயக்கங்களிலும் ஓடினால் அந்த சந்தேகங்களும் தயக்கங்களும் அந்த நம்பிக்கைகளை சரித்து விடுகின்றன. பாண்டவர்கள் ஒற்றுமையாக இருந்ததால் திரௌபதி தான் செய்த சபதத்தில் அவிழ்த்து விட்ட தனது கூந்தலை அள்ளி முடிக்க முடிந்தது.

இங்கு இந்த ஒற்றுமையீனம் தான் ஈழத் தமிழ் மக்களின் கூந்தல்கள் அறுக்கப்பட்டதற்கும், எஞ்சியவர்கள் அள்ளிக் கட்டுவதற்கே கைகளில் இல்லாமல் சரிந்து விழுந்து கொண்டிருப்பதற்குன் காரணங்கள்.

எத்தனையோ பேர் ஒற்றுமையைப் பற்றி பேசினாலும், வரலாற்றினை கைப்படுத்தி நிற்பவர்கள் விவிலியத்தின் வேத நூல், பகவத் கீதை போல பற்பல விளக்கங்கள் தருகிறார்கள்.

இந்தப் பகுதியை எழுத இருந்த போது, நத்தார் பண்டிகை கடந்து, ஆழிப் பேரலை தாக்கிய டிசம்பர் 26 ஆம் நாள். அவை பற்றி சர்வதேச ஊடகங்களில் வந்த விவரங்களையும் நிலத்திலிருந்து நேரடியாக நிவாரண உதவிகளுக்காக எனது சகலன் வன பிதா ஜேம்ஸ் அந்த நாள்களில் அனுப்பிய செய்திகளையும் நினைவின் மீட்புகளுக்காகப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

அவற்றின் இடையே தமிழ் மக்கள் செல்ல வேண்டிய பாதைகள் பற்றி எழுதியவையும், களத்தில் அவர் அறிந்து கொண்ட, அவை பற்றி வந்த செய்திகளை விசாரிக்கும் போது குடும்பத்தவர்கள் பூசைகளிலும் உவமையாக கூறியவையும் நினைவுக்கு வந்தன.

இயேசு அக்காலத்தில் தம் சீடர்களுக்கு உவமை கூறிய விடயம் ஒன்று.

“பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறொருவருக்கு வழிகாட்ட இயலுமா? இருவரும் குழிகளில்தான் விழுவார்கள். சீடர் குருவானவரை விட மேலானவர் அல்லர். ஆனால் தேர்ச்சி பெற்றவரும் தம் குருவை போல் இருப்பார். நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல்,உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை கவனிப்பது ஏன்? உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை நீங்கள் பார்க்காமல் இருந்து கொண்டு, உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்கட்டுமா என்று எப்படி கேட்க முடியும்? முதலில் உங்கள் கண்ணில் இருக்கும் மரக் கட்டையை எடுத்து வையுங்கள். அதன் பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க உங்களுக்கு தெளிவாய்க் கண் தெரியும்”

“கெட்ட கனி தரும் நல்ல மரமும் இல்லை; நல்ல கனி தரும் கெட்ட மரமும் இல்லை. ஒவ்வொரு மரமும் அதன் கனியாலேயே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்தி பழங்களை பறிப்பாரும் இல்லை. முட்புதர்களில் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்ப்பாரும் இல்லை. நல்லவர் தம் உள்ளம் ஆகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயது என்றும் தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நினைவையே வாய் பேசும்.”

பின்னர் போர் முடிந்து, காயங்கள் பட்டு வெளியேறி, பாதைகள் பற்றி பேசிய நாள்களில் எல்லாம் தனது மன ஊனங்களிலும் மக்களது அவலங்களினாலும் மறைநூல் உதாரணங்களைத் தான் தருவார்.

ஏரோது அரசன் பெத்தலோகத்தில் இயேசு பிறந்தார் என கிழக்கிலிருந்து ஞானிகள் வந்து சொல்ல, சஞ்சலமுற்று மேலும் அவர்கள் ’இஸ்ரவேலை ஆயர் என ஆள்பவர் ஒருவர் உள்ளிருந்தே தோன்றுவார் என்று இறைவாக்கு ஒன்று உண்டு’ என்று தெரிவிக்க ஞானிகளை அழைத்து, அந்தக் குழந்தை இருக்கும் இடத்தை அடைந்து வருமாறும், பின் நானும் சென்று வணங்குவேன் என ஏரோது கூறினானாம். மூன்று ஞானிகள் விண்மீன்கள் உதவியினால் குழந்தை இயேசுவை கண்டு பெரு மகிழ்ச்சியும் அடைந்து வணங்கினார்கள். ஆனால் ஆண்டவனின் இந்த வெளிப்பாட்டை கண்ட ஞானிகள் ஏரோதிடம் திரும்பிச் செல்லாமல் வேறு வழியாகப் பயணம் செய்தார்கள்.

தமிழ் மக்களது புதிய வாழ்வும் தாம் ஏற்கனவே வாழ்ந்த பிரிவினைகள் உறைந்த போரின் வழிகளில் செல்லாது, புதிய பாதையாகவும், புது வாழ்வாகவும் உருவாக வேண்டும். – என்பார்.

தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# திருவெம்பாவையும் மார்கழி மகத்துவமும்!

இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் இன்று (28) அதிகாலை ஆரம்பமாகின்றது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் இன்று 28.12.2022ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10தினங்கள் திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இறுதியில் பத்தாம் நாள் ( 06.01.2023) வெள்ளிக்கிழமை திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இக்காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையாம் அதிகாலை 4 – 6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இவ் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.



நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். தை மாதம் தொடங்கி ஆனி வரை அவர்களுக்குப் பகல் பொழுதாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி வரை இரவுப்பொழுதாகவும் அமையும்.

அப்படிப் பார்க்கும்போது அதிகாலையான பிரம்ம முகூர்த்தம் மார்கழியில்தான் வருகிறது. தேவர்களுக்கே பிரம்ம முகூர்த்தமாக இருக்கிறபடியால், மார்கழி மாதம் மானிடர்களுக்கும் சிறந்ததாகிறது.

மாதங்களில் நான் மார்கழி என்று பகவான் மகாவிஷ்ணு கூறியுள்ளார். மார்கழி மாதம் தனுர் மாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாதத்தில் தனுசு ராசியில் குருவின் வீட்டில் சூரியன் குடியேறுகிறார்.

அப்படி சிறப்புகள் நிறைந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் குளித்து விட்டு பாவை நோன்பு இருந்ததால் மனதிற்கு பிடித்த கண்ணுக்கு நிறைந்த கணவன் கிடைப்பார் என்பது நம்பிக்கை.

மகத்துவம் நிறைந்த மார்கழியில் உலக நாட்டங்களைக் குறைத்து, இறைவனிடமும் அவர் திருவடி சார்ந்த செயல்பாடுகளிலுமே மனம் ஒன்ற வேண்டும் என்பதற்காகத்தான் வேறெந்த நிகழ்வுகளையும் நடக்காமல் பார்த்துக் கொண்டார்கள். அதன் வழியொட்டியே மார்கழியில் சுப நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரம் இறைவனிடம் மனம் லயிக்க வேண்டும் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும்'.

மார்கழியில் அதிகாலை எழுந்து குளித்து விட்டு வாசல் தெளிப்பதும் மனதுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் புத்துணர்ச்சி தரும். சூரியனிடம் இருந்து வருகிற ஓசோனின் தாக்கம் மார்கழி அதிகாலையில் அதிகமாக இருக்கும். இதனால் அதிகாலையில் வெளியே வருவதால் அந்தக் காற்றும், கதிரும் உடலை வலிமைப்படுத்தும் என்பதால்தான் அதிகாலை குளியலை முன்னோர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

பெண்கள் அதிகாலையில் நீராடி பாவை நோன்பு நோற்று பெருமாளை வணங்கி திருப்பாவை பாடுகின்றனர். அந்த கண்ணனே தங்களுக்கு கணவனாக வரவேண்டும் என்பது பல பெண்களின் கனவாக உள்ளது. அனுமன் ஜெயந்தி வருவதும் இந்த மார்கழியில்தான்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த மார்கழியில் விடியற்காலம் விஷ்ணுசகஸ்ரநாமம் படிப்பது மற்றும் திருப்பாவை படிக்க இறைவன் அருள் கிடைக்கும்.

### திருவெம்பாவை


மார்கழி மாதத்தில்தான் வருகிறது. சிவனுக்கு உகந்த திருவாதிரை திருவிழா வருகிறது. சிவபெருமானின் பக்தைகள் நோன்பு நோற்பதற்காகத் தோழியை எழுப்பச் செல்லும் காட்சி திருவெம்பாவையிலும் வருகிறது. சிவனுடைய அடியார்களே கணவனாக வர வேண்டும், அவனோடு சேர்ந்து சிவனைத் தொழ வேண்டும் என்பதே திருவெம்பாவையில் வருகிற பாவை நோன்பின் நோக்கம்.

### மார்கழி மாண்பு.

மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு வாசலில் கோலமிடுவது தொன்றுதொட்டு நடந்துவருகிறது. மாட்டுச்சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவதும் நடக்கும். மாட்டுச்சாண உருண்டையில் பூசணிப்பூவை செருகி, கோலத்துக்கு நடுவே வைப்பது மார்கழி முழுக்கவே நடைபெறும். சில வீடுகளில் அந்தப் பூ உருண்டையை வரட்டியாகத் தட்டி சேகரித்து சிறுவீட்டு பொங்கலன்று ஆற்றில் விடுவார்கள்.

### கல்யாணம் கை கூடும்

அக்காலத்தில், திருமணத் தரகர்களோ, மாப்பிள்ளை – பெண் தேவை என்பதற்காக வெளியிடப்படும் கல்யாண விளம்பரங்களோ கிடையாது. எந்த வீட்டில் பெண் அல்லது பிள்ளை திருமணத்துக்குத் தயாராக இருக்கிறார்களோ, அந்த வீட்டின் வாயிலில் மட்டும் கோலத்தின் மேல் பூசணிப் பூ வைப்பார்கள். ஒட்டு மொத்தமாக எல்லா வீடுகளிலும் வைக்க மாட்டார்கள். மார்கழி மாத அதிகாலையில் வீதி பஜனையில் வருபவர்களின் பார்வையில் இந்தப் பூக்கள் தென்படும். விவரத்தைப் புரிந்து கொள்வார்கள். தை மாதம் பிறந்த உடனே பேசி, கல்யாணத்தை முடிப்பார்கள். இதன் காரணமாகவே மார்கழி மாதத்தில் வீட்டு வாயிலில் இருக்கும் கோலத்தில் பூக்களை வைத்தார்கள்.




### மார்கழி மகத்துவம்.

அதுபோலவே மார்கழி மாதத்தில் பல புராதன நிகழ்வுகளும் நடந்துள்ளன. மகாபாரத யுத்தம் மார்கழி மாதத்தில் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. திருப்பாற்கடல் கடையப்பட்டபோது, முதலில் விஷம் எழுந்ததும், சிவன் அதனை உண்டு உலக மக்கள் அனைவரையும் காப்பாற்றியதும் இதே மார்கழி மாதத்தில்தான். இந்திரனால் பெரு மழை வெள்ளம் உருவாக்கப்பட்டு கோகுலத்தில் அனைவரும் துன்பப்பட்டபோது, கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான். பகவத் கீதை பிறந்ததும் இந்த மாதத்தில்தான்.

சூடிக்கொடுத்த சுடர்கொடியாளின் மாதம் இது. ஆண்டாளின் பாசுரங்களை தியானித்து பலனை அடைவோம் வாருங்கள்.

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு



காலைக்கதிர் Kalaikkathir

## மாவையின் ........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது என்பதை கண்டால் அவர்களின் அணுகு முறையில் மாற்றம் இருக்கும் என நம்புகிறோம்.

ஆனால் இப்பொழுதும் தமிழ் தரப்பில் சிலர்தான் தனித்துப் போக வேண்டும் என கூறுகிறார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளை இயன்ற வரை ஒன்றிணைத்து செயல்படவே முனைகிறோம்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் அரசியல் செயற்குழுவில் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட முடிவுகள் பற்றி செய்திகள் வெளியாகின. அந்த செயற்குழுவில் உள்ள ஒன்பது பேரில் பெரும்பான்மையானவர்கள் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரானவர்கள். ஆனால் ஜனவரியில் கொழும்பில் தமிழ் கட்சிகள் சந்திப்பு உள்ளதாக மாவை சொன்னதாகவும் செய்தி வந்தது. இது முரண்பாட்டை ஏற்படுத்த கூடும்.

ஆனால் இந்த முரண்பாடு ஏற்படுவதற்கு சிலரது சுயநல சிந்தனைகள்தான் காரணம். மாவை சேனாதிராஜாவை சிறையில் இருந்து விடுவித்த நீதிபதி நான் தான். ஆனால் இப்போதைய நிலையில் மாவையை எங்கள் தலைவராக கொண்டு விடயங்களை நகர்த்தலாம் என்றுதான் சொல்கிறேன். மக்களுக்காக நாங்கள் செயற்பட ஆரம்பித்தால் சுயநல சிந்தனைகளை கைவிட்டு மக்கள் சார்பில் தான் சிந்திக்க வேண்டும். - என்றார்.

## வியட்நாமில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக இலங்கை கடற்படையை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார். கொழும்பிலுள்ள கடல் சார் ஒருங்கிணைப்பு அவசர நிலையம் வியட்நாம், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடிய நிலையில் அந்த கடற்பகுதியில் இருந்த ஜப்பானிய கொடியிடப்பட்ட ஹீலியோஸ் லீடர் கப்பல் அவர்களை காப்பாறி வியட்நாம் கடற்படையிடம் ஒப்படைத்தது.

அவர்கள் 3 தடுப்பு முகாமில் தடுத்த. வைக்கப்படிருந்த நிலையில் உலக மீள்குடியேற்ற ஸ்தாபனமான (ஐ.எம்.ஓ) அமைப்பு அனுசரணையுடம் மீண்டு நாட்டுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்த 151 பேரை நேற்று செவ்வாய்கிழமை வியட்நாம் நேரப்படி மால்சி 5 மணிக்கு இலங்கைக்கு செல்லும் விமானத்தில் ஏற்றுவதற்காக முகாமில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைவர்கள் என முகாமில் இருந்து வருவதற்காக காத்திருக்கும் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

## எட்டு அமைச்சுக்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதற்கு முன்னர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய எச்.கே.டி. டபிள்யூ. எம்.என்.பி. ஹபுஹின்ன, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்டச்செயலாளராக பணியாற்றிய கே. மகேசன் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராகவும், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றிய எம். யமுனா பெரேரா, மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றிய எம்.எம். நைமுதீன், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராகவும், ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர்நாயகமாகப்பணியாற்றிய பி.பி. குணதிலக்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராகப் பணியாற்றிய ஏ.எம்.பி. எம்.பி. அத்தபத்து வணிக, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், விவசாய அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணியாற்றிய ஆர்.எம்.டபிள்யூ.எஸ். சமரதிவாகர, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### பதவிக் காலம் நீடிப்பு

மேலும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் யு.டி.சி. ஜயலால், கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க ஆகியோரின் பதவிக் காலம் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## யாழ் அரச அதிபர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் அமைச்சின் செயலாளராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மகேசனுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் தற்போது அமைச்சின் செயலாளராக ஜனாதிபதியினால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதி சீனத் தூதுவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிகழ்வில் சீன பிரதித் தூதுவர் ஹூ வெய் பங்குபற்றுவார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்மின் ஏறபாட்டில் நாளை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ள இந்த உதவித் திட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தலா 50 குடும்பங்கள் வீதம் 100 குடும்பங்களிற்கு முதலில் இப்பொறுள்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

## லொறி - ஓட்டோ நேரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

கல்கமுவ, மஹகல்கடவல பிரதேசத்தை சேர்ந்த 21 வயதான தோன் மலிந்த மற்றும் கல்கமுவ, களுந்தேவ பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ஒருவருமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறி ஒன்றும் தலாவயிலிருந்து தம்புத்தேகம நோக்கி பயணித்த ஓட்டோவுமே தம்புத்தேகம கொன்வெவ பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

பிரபல சவர்க்கார தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த ஊழியர்கள் நால்வர் தமது பணியை முடித்துக் கொண்டு ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தபோதே விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் படுகாயமடைந்த நால்வர் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும், படுகாயமடைந்த மற்றைய இருவரும் தம்புத்தேகம வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐயப்ப பக்தர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறுப்பு நிற உடை அணிந்து பக்தி பூர்வமாக கலந்து கொண்டனர்.

நல்லூர் ஆலய முன் வீதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் பருத்தித்துறை வீதி ஊடாக, ஸ்டான்லி வீதி,கே.கே.எஸ்.வீதியினை அடைந்து பலாலி வீதியூடாக கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்திற்கு ஊர்வலமாகச் சென்றடைந்தது.

## கரடிபோக்குச் சந்தியை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளனர்.

நீதவான் பார்வையிட்ட பின்னர் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு உடற்கூற்று பரிசோதனை இடம்பெற்று மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், கிளிநொச்சி குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir

# சமூகத்திலுள்ள அசட்டையீனத்தால்தான் போதைப்பயன்பாடுகள் அதிகரித்துள்ளன!

## யாழ். மறைக்கோட்ட முதல்வர் தெரிவிப்பு



சமூகத்தில் காணப்பட்ட அசட்டையீனத்தால்தான் போதைப் பயன்பாடு அதிகரித்துள்ளது. எனவே, சமூகத்தவர்களே இதனை இல்லாது செய்வதற்கு முயற்சிகளை எடுக்கவேண்டும் என யாழ்ப்பாண மறைகோட்ட முதல்வர் அருட்பணி ஜோண் மௌளிஸ் அடிகளார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துக் கொண்டு செல்கிறது. தடுப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டுவந்தாலும் பயன்பாடும் அதிகரித்து செல்கிறது.

போதைப்பொருள் பயன்பாட்டால் தீமைகள் பல காணப்படுகின்றன. ஒருவனுடைய மனக்கோளாறு, உளவியல் பாதிப்பு, வீட்டில் உள்ளவர்களுடன் பாகுபாடு ஏற்படுகிறது.

சமூக விழுமியங்கள், ஒழுக்க கலாசார பண்பாட்டு விழுமியங்கள் மாற்றியமைக்கப்பட்டுவருகிறது. சமூக ஆர்வலர்கள் மத்தியில் இதனைத் தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் அதிகளவான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை உள்வாங்க வேண்டும். சமூக சமய ரீதியாகவும் பல விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும். போதைப்பயன்பாட்டுக்குள் ஆழானவர்களை எப்படி கையாள்வது என்பதிலும் கூடியகவனம் செலுத்த வேண்டும்.

இதைத் தவிர்த்து அவர்களை ஒதுக்குவது, அவர்களின் குடும்பத்தை ஒதுக்குவது இயலாதகாரியம். அவர்களும் எங்களுடைய ஓர் அங்கமே. சமூகத்தில் இருப்பவர்களது அசட்டையீனத்தால்தான் அவர்களும் இத்தகைய நிலைக்குள் ஆளாகியுள்ளார்கள்.

ஆகவே அவர்களை ஒதுக்காது அவர்களை அரவணைத்து நல்வழிபடுத்த வேண்டும். இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்.

போதைக்கு அடிமைப்பட்டவர்களை சிறைச்சாலைகளில் தடுத்துவைப்பது நல்லதல்ல. இவர்களுக்கென பல புனர்வாழ்வு மையங்களை உருவாக்கி அங்கு அவர்களுக்கான புனர்வாழ்வு வழங்கி தொழில் முயற்சிகளையும் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம்தான் அவர்களை மீண்டும் போதைக்கு அடிமையாகாது பாதுகாத்து கொள்ளவேண்டும்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அற்பசொற்ப பணத்துக்காக, சலுகைக்காக வியாபாரத்தில் ஈடுபடுவதை முற்றாக நிறுத்த வேண்டும்.

நீங்கள் இத்தகைய வியாபாரத்தை செய்வதால் உங்களை ஒரு சமூகமே தூற்றுகின்ற நிலை உருவாகின்றது. இதன் பாதிப்புக்களை உணர்ந்து இந்த வியாபாரத்தைக் கைவிட வேண்டும் அரசதரப்பு மற்றும் படைத்தரப்பு இந்த விடயத்தில் கூடிய கவனமெடுத்து தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். – என்றார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சிடும் செலவுகள் வாக்குச்சீட்டின் அளவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சிடும் செலவுகள் வாக்குச்சீட்டின் அளவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் போது மாத்திரம் ஒரே அளவிலேயே வாக்குச்சீட்டு அச்சிடப்படும் எனவும், ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாக்குச்சீட்டின் அளவு குறைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வாக்குச் சீட்டுகளை அச்சிட எடுக்கும் நேரத்தைக் கருத்தில் கொண்டு, அதற்கான செலவுகள் திருத்தப்படும் எனவும் அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் தினத்துடன் ஒப்பிடும் போது வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கான கால அவகாசம் மிகக் குறைவாக இருந்தால் செலவுகள் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட பணிகள் அரசாங்க அச்சகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# சட்டவிரோதமாக வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் ஊடாக 2 கோடி ரூபா மோசடி!

## சி.ஐ.டி. விசாரணை

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு தொலைபேசி நிறுவனம் ஒன்றுக்கு இழப்பை ஏற்படுத்தும் வகையில் சுமார் 2 கோடி ரூபாவை மோசடி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மேற்படி நிறுவனத்தின் முகாமையாளர் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மேற்படி நிறுவனம் ஒன்றின் சிம்மை பாவித்து சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளைப் பெற்று 53 ஆயிரத்து 983 அமெரிக்க டொலர்களை மோசடி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் உண்மைகளை அறிக்கை செய்துள்ளது.

# பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1,955 வெளிநாட்டவர் நாடு கடத்தப்பட்டனர்!

கடந்த நான்கு வருடங்களில் குற்றங்கள் மற்றும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஆயிரத்து 955 வெளிநாட்டவர்கள் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர் என குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் அதிகமாக 898 பேர் 2019 ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், 2018 ஆம் ஆண்டு 678 வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டில் 249 வெளிநாட்டவர்களும், 2021ஆம் ஆண்டில் 130 பேரும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் எனக் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு கடத்தப்பட்ட வெளிநாட்டவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இந்தியர்கள் எனவும் கூறப்படுகிறது.

குடிவரவுதிணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, நேபாளம், நைஜீரியா, பாகிஸ்தான், ரஷ்யா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் பிரஜைகளும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

# பாதுகாப்பு நடவடிக்கை அம்பாறையில் தீவிரம்!

இலங்கை அரசாங்கம் நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முழுமையாக பாதுகாப்பு நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். இந்த மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான கல்முனை, காரைதீவு, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று போன்ற பிரதேச முக்கிய சந்திகளில் இராணுவம் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

சம்மாந்துறை கல்முனை நகர் பகுதியில் பெரும்பாலான வர்த்தக நிலையங்களிற்கு முன்பாகவும் மின்தடை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மக்களின் பாதுகாப்பைக் கவனத்திற் கொண்டும் இராணுவத்தினர் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் இந்தப் பகுதிகளில் போதைப் பொருள் கடத்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலும் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் யாவும் இராணுவத்தினரால் சோதனையிடப்படுகின்றன.

இது தவிர, இங்குள்ள பள்ளிவாசல்கள் தேவாலயங்கள் கோயில்கள் உட்பட பல்வேறு பொது இடங்களிலும் சுழற்சி முறையில் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் வீதி ரோந்து சேவையிலும் நடமாடி வருகின்றனர்.

# மின் கட்டணத்தை உயர்த்த கூடாது என்றால் பல மணி நேரம் மின்வெட்டுக்கு பழகிக்கொள்க!

## அமைச்சர் காஞ்சன கோரிக்கை



மின் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்றால் நாளாந்த மின்வெட்டை மக்கள் எதிர்நோக்க வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி தினமும் பல மணி நேரம் மின் சாரம் துண்டிக்கப்பட்ட வாழ்க்கை முறைக்கு மக்கள் மாறிக் கொள்ள வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி மாதம் 05, 09 மற்றும் 13 ஆம் திகதிகளில் 03 நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடையவுள்ளன என அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கான புதிய நிலக்கரி விநியோகத்துக்கான ஒப்பந்தம் சட்டமா அதிபரின் பரிந்துரைகளைப் பெற்றதன் பின்னர் இந்தோனேசிய நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தலுக்கான மை இறக்குமதி தொடர்பில் கவனம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு

இந்தியா வழங்கும் கடன் உதவி வசதியின் கீழ் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேவையான மை இறக்குமதி செய்வது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கு முன்னர் தற்போது கைவசமுள்ளமை காலாவதியாகி விட்டதா என பரிசோதிக்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திடம் அறிக்கை கோரியுள்ளதாக அறிவித்துள்ளது.

முந்தைய ஆண்டுகளில் மை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டாலும், இறுதியாக 2020 தேர்தலுக்காக உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து மை கொள்வனவு செய்யப்பட்டது.

இதேவேளை இந்திய வழங்கிய கடனுதவியின் கீழ் மருந்துகளை முறையாக பெற்றுக்கொள்ளப் படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

அத்தோடு மருந்துக்கள் கடன் உதவியின் கீழ் இரும்பை இறக்குமதி செய்யும் முயற்சி இடம்பெற்று வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2022இல் வெளியிடப்பெற்றது.